# “பவுலே, நீங்கள் செய்தது என்ன?” [21:17-26]

இப்பொழுது நாம் நடபடிகளின் புத்தகத்தில் மிகவும் கலக்கமுள்ள பகுதிகளுக்கு வருகின்றோம்: இது எருசலேம் தேவாலயத்தில் பாவ நிவாரணப் பலி செலுத்துதலில் பவுலின் பங்கேற்பு பற்றிய வரலாறு (21:17-26) எனப்படுகின்றது. பவுல் ஏற்கனவே கலாத்தியருக்கு எழுதியிருந்த நிருபத்தில்,[1] “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே” (கலா. 3:24, 25) என்று எழுதியிருந்தார். அவர் ரோமருக்கு[2] எழுதியிருந்த நிருபத்தில்,

> அப்படிப் போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரி லிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடை யவர்களாகி, ... கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப் பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள் (ரோமர் 7:4).
>
> விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோமர் 10:4).

என்று அழுத்தமாக உறுதிப்படுத்தியிருந்தார்.

கிறிஸ்தவர்கள் இனியும் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப் பட்டவர்கள் அல்ல, உண்மையில் கிறிஸ்தவர்கள் “கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களா னார்கள்” [KJV], “கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவா யிருக்கிறார்” என்றெல்லாம் எழுதிய மனிதர், “கள்ளர் குகை யொன்றில்” (மத். 21:13; KJV) பாவ நிவாரணத்திற்கான எட்டு பலிகளில்[3] பங்கேற்க மனதுள்ளவராயிருந்தது எப்படி? நம்மில் பலர் உணரும் இத்திகைப்பை, விளக்கவுரையாளரான ஆதம்

*கிளார்க் அவர்கள் பின்வருமாறு வெளிப்படுத்தினார்:*

> *இந்தக் கருத்தை நாம் எப்படிக் கவனித்தாலும், இந்த நிகழ்ச்சியின்போது, யாக்கோபு மற்ற மூப்பர்கள் மற்றும் பவுல் ஆகியோரின் நடத்தையானது ஏற்றுக் கொள்ளப் படுவதற்கு மிகவும் கடினமானதாகவே இருக்கின்றது. இந்தச் செயல்பாட்டில் நாம் முற்றிலுமாகப் புரிந்து கொள்ளாத விஷயம் ஏதோவொன்று காணப்படுகின்றது.*

*ஒரு கல்வியாளர் தமது தேவபக்தியின்மையை ஒளித்து வைக்க முடியாத அளவுக்கு இவ்விஷயமும் முழுவதும் அதிகமாய் முரண்பாடு கொண்டதாக இருக்கின்றது:*

> *கால்வின் அவர்கள் தமது மரணப்படுக்கையில் தேவனு டைய பரிசுத்த தாயாருக்கு[4] ஒரு பொன் அங்கியை பொருத்தனை செய்தார் என்பதை ஒருவர் நம்ப முடியும் ... இது ரோமருக்கும் கலாத்தியருக்கும் நிருபங்களை எழுதியவர் தேவாலயத்தின் வெளிமுற்றத்தில் ஏழு நாட்கள் நின்றிருந்து, ரபீக்களின் உண்மையற்ற உச்சாடனங்களால் சூழப்பட்ட பொருத்தனைக்குத் தன்னைக் கீழ்ப்படுத்திக் கொண்டதற்கும், விசுவாசமற்ற ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களால் அந்தக் காலகட்டத் தில் கூறப்பட்ட வழிபாட்டு ரீதியானதென்ற மதியீனங் கள் எல்லாவற்றையும் அனுமதித்ததற்கும் சமமான தாகவே இருந்தது.[5]*

*நடபடிகள் புத்தகத்தின் நேர்மைத்தன்மை மற்றும் ஏவுதல் பெற்ற தன்மை ஆகியவற்றில் நம்பிக்கையுள்ளவர்களா யிருக்கும் நாம், அப். 21:17-26ல் உள்ள பிரச்சனையின் வரலாற்றுருவை மறுப்பதினால் தப்பித்துக் கொள்ள முடியாது. பவுல் என்ன செய்தார், ஏன் அதைச் செய்தார் என்ற கேள்வி களுடன் நாம் போராட வேண்டியதாய் இருக்கின்றது. G.கேம்ப்பெல் மார்கன் போன்ற சிலர், பவுலின் செயல் பாடுகளில் தற்காப்புவாதத்திற்கானது சிறிதளவே இருந்ததாகக் கண்டார்கள்: “அந்த நிகழ்ச்சியின் போது பவுல் மாபெரும் தவறொன்றைச் செய்தார் என்று நான் கருதுகின்றேன்” என்று இவர்கள் கூறுகின்றார்கள். இதற்கு மாறாக, பவுலின் நடத்தை யானது உயரிய பாராட்டிற்குரியது என்றும், அவர் போதித்த*

ஒவ்வொரு கொள்கையுடனும் அது இணக்கமுடையது என்றும் சிலர் நம்புகின்றார்கள்.

பவுலின் இந்தச் செயல்பாடு பற்றி லூக்கா பாராட்டவோ அல்லது கண்டனம் செய்யவோ இல்லையென்பதால், நமது முடிவுகளில் நாம் உபதேச ரீதியாக இருப்பதென்பது முடியாது.[6] இருப்பினும், இவ்வசனப் பகுதியைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வதிலும், இதை நமது சொந்த வாழ்வில் பயன்படுத்தும்படியான கொள்கைகளைத் தேடுவதிலும் மதிப்பீடு உள்ளது. பவுல் மிகச் சரியாகச் செய்தது என்ன என்பதை நாம் இந்தப் பாடத்தில் தீர்மானிக்க முயற்சி செய்வோம். அடுத்த பாடத்தில் நாம், அவர் ஏன் அதைச் செய்தார் என்று கலந்துரையாடுவோம்.

## திருப்தியளிக்கும் ஒரு வரவேற்பு (21:17, 18)

பவுலும் அவரது பயணக் குழுவும் பெந்தெகொஸ்தே[7] பண்டிகை நாளுக்கு முன்னதாக எருசலேமுக்கு வந்து சேர்ந்ததுடன் நமது வேதபாடப் பகுதி தொடங்குகின்றது. லூக்கா, "நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது, சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்" (வ. 17) என்று எழுதினார். "நாங்கள்" என்பது, லூக்கா, தீமோத்தேயு மற்றும் குறைந்தபட்சம் ஆறு புறஜாதிக் கிறிஸ்தவர்கள் ஆகியோரை உள்ளடக்கியது (20:4, 5). "சகோதரர்" என்பது உபசரிப்பாளர்களில் மினாசோன் (21:16) மற்றும் அவரது வீட்டில்[8] கூடியிருந்த வரவேற்புக் குழுவினர் ஆகியோரைக் கொண்டதாயிருக்கலாம். அவர்களின் உற்சாகமான வரவேற்பு, பவுலுக்கிருந்த சில கவலைகளை விடுவித்துக் கொள்ள உதவி யிருக்கலாம் (ரோமர் 15:30, 31ஐக் காணவும்). NIVயில், "சகோத ரர்கள் எங்களை இதமாக வரவேற்றார்கள்" என்றுள்ளது.

அடுத்த நாளில் பவுலும் அவருடன் வந்திருந்த மற்றவர் களும் எருசலேமின் சபையில் இருந்த மூப்பர்களுடன் பேசும் வாய்ப்பைப் பெற்றார்கள். இது உறுதியாகவே யாக்கோபின்[9] வீட்டிலே நடந்திருக்கும், இவர் கர்த்தரின் அரை சகோதரரும், எருசலேம் சபையின் தூண்களில் ஒருவராகவும் கருதப்பட்டார்

*(கலா. 2:9). வசனம் 18ல், "மறுநாளிலே பவுல் எங்களைக்[10] கூட்டிக் கொண்டு, யாக்கோபினிடத்திற்குப் போனான்; மூப்பரெல்லாரும் அங்கே கூடி வந்தார்கள்" என்று கூறப்படுகின்றது.*

*"மூப்பரெல்லாரும்" என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். நடபடிகள் பற்றிய நமது பாடம் முழுவதிலும், அப்போஸ் தலர்களின் தலைமைத்துவம் என்ற தற்காலிக அமைப்பில் இருந்து மூப்பர்களின் தலைமைத்துவம் என்ற நிரந்தர அமைப் பிற்குச் சபை கடந்து சென்றதை நாம் காண்கின்றோம். முதலில் நாம் "அப்போஸ்தலர்கள்" பற்றியும் (2:42; 4:35, 37; 5:2; 8:1, 14; 9:27), பிறகு "அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்கள்" என்பது பற்றியும் (15:2, 4, 6, 22, 23; 16:4), மற்றும் இப்பொழுது "மூப்பர்கள்" என்பது பற்றியும் (21:18; 14:23; 20:17 ஆகியவற்றையும் காணவும்) படிக்கின்றோம். ஆதியில் இருந்த பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் எவரேனும் அச்சமயத்தில் எருசலேமில் இருந்தார்களா இல்லையா என்பதை நாம் அறிவதில்லை. ஒருவேளை அவர்கள், தங்களுக்குக் கொடுக்கப் பட்ட கட்டளையை (மத். 28:18; அப். 1:8) நிறைவேற்றுவதற் காக மற்ற பகுதிகளில் பிரசங்கித்துக் கொண்டிருந்திருக்கலாம்.[11] எவ்வகையிலும், அங்கிருந்த சபையைக் கண்காணிக்கும் பொறுப்பானது மூப்பர்களிடத்தில் ஒப்புக்கப்பட்டிருந்தது.*

*"யாக்கோபினிடத்திற்கு ... மூப்பரெல்லாரும்" என்ற சொற்றொடரானது, யாக்கோபு அங்கிருந்த மூப்பர்களில் ஒருவரல்ல என்று அர்த்தப்படுத்தும் என்பது அவசியமல்ல. நிச்சயமாகவே இச்சொற்றொடர், யாக்கோபு அங்கு* "the bishop" *அதாவது சபையின் மீது தனி அதிகாரம் கொண்ட (ஒரே) மூப்பராக, துணை நிலைப்பொறுப்பில் ஊழியம் செய்த "மூப்பர்களுக்கு" எதிரானவராக இருந்தார் என்று அர்த்தம் தருவதில்லை. அப். 21:18 பற்றி பின்வரும் தவறான விளக்க வுரையை* A.C. *ஹெர்வி அவர்கள் கொடுத்தபோது நிச்சய மாகவே அவர் நுனிப்புல் மேய்ந்து கொண்டிருந்தார்:*

> *பவுல் சென்று யாக்கோபைப் பார்த்த இந்த நிகழ்ச்சியைக் காட்டிலும், வேறு எந்த நிகழ்ச்சியும் எருசலேம் சபையில் யாக்கோபு வகித்திருந்த மூப்பர் என்ற தனிச்சிறப்பு வாய்ந்த தகுதியைச் சிறப்பாக அடையாளப்படுத்த*

*முடியாது, மற்றும் அவர் எருசலேமில் இருந்த மற்ற எல்லா மூப்பர்களாலும் சூழப்பட்டுக் காணப்பட்டார். இது எப்பிஸ்கோப்பல் அலுவலுக்கான அப்போஸ்தலத்துவத் தொடக்கத்தின் தனிப்பெரும் ஆதாரமாக விளங்குகின்றது.*

*இங்கிலாந்து சபையின் விளக்கவுரையாளருடைய இந்த வார்த்தைகள், மூப்பர்களின் அமைப்பு பற்றிய புதிய ஏற்பாட்டின் போதனையைப் புரிந்து கொள்ளுதலில் உள்ள குறைபாட்டையே பிரதிபலிக்கின்றன. அப். 20:17, 28ஐப் படித்த போது, "மூப்பர்" மற்றும் "ஆயர்" என்ற வார்த்தைகள் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் ஒன்றுக்குப் பதில் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டன என்றும், இவை இரண்டுமே ஒரே வித அலுவல்/ஊழியத்தையே குறித்தன என்றும் நாம் கண்டோம். திரு. ஹெர்வி அவர்கள் அப். 21:18ல் படிக்கும் போது, மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பிற்காலத்தில் இன்னும் அதிகமாக வளர்ந்த பதவிகளின் படிநிலை அமைப்பொன்றைத் தானே கண்டு பிடித்தார்.*

*யாக்கோபுவுக்கும் மற்ற மூப்பர்களுக்குமிடையில் லூக்கா எவ்விதமான வேறுபாட்டையும் குறிப்பிடவில்லை, அதற்கு அவசியமும் இருந்ததில்லை என்பதையும் நான் இங்கு குறிப்பிடுகின்றேன். ''நான் மூப்பர்களில் ஒருவருடைய வீட்டிற்குச் சென்றேன், அங்கு எல்லா மூப்பர்களும் இருந்தார்கள்'' என்று நான் எழுத வேண்டியிருந்தால், முதலில் குறிப்பிடப்பட்ட மூப்பர், பின்பு குறிப்பிடப்பட்ட மூப்பர்களின் குழுவில் அங்கமல்ல என்று நீங்கள் முடிவு செய்ய மாட்டீர்கள். மாறாக, மூப்பர்கள் எல்லாரும், மூப்பர்களில் ஒருவருடைய வீட்டில் இருந்தார்கள் என்றுதான் நீங்கள் முடிவு செய்வீர்கள். அப். 21:18லும் இது போலவே குறிப்பிடப்பட்டிருந்திருக்கும். "யாக்கோபு மற்றும் மற்ற மூப்பர்கள்'' என்று மாற்கு பிளேக் அவர்கள் குறிப்பிட்டதை நான் ஆமோதிக்கின்றேன்.*

*ஒரு மறுப்பை நான் கேட்கின்றேன்: "யாக்கோபு மூப்பர்களில் ஒருவராயிருந்தால் அவர் மட்டுமே பெயர் கூறிக் குறிப்பிடப்படுவது ஏன்?'' ஏனென்றால் அது அவருடைய வீடாக இருந்தது, ஏனென்றால், அவர் நன்கு அறியப்பட்ட*

*வராகவும், உயரிய மரியாதை பெற்றவராகவும் இருந்தார். பின்வந்த எடுத்துரைப்புகள் எதிலும் யாக்கோபு தனிப்படக் குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனியுங்கள். வசனம் 19 முதல் 25 வரையிலும் ("அவர்கள்", "அவர்களை" முதலிய) கூட்டப் பெயர்ச் சொற்களே பயன்படுத்தப்பட்டன. இது எல்லா மூப்பர்களையும் குறிப்பிட்டது.*

*பவுல், "எல்லா மூப்பர்களையும்" சந்தித்தார் என்பதே லூக்காவின் கருத்தாகும். பிரச்சனைகள் சரியாக்கப்படும் வரையில்[12] - மூப்பர்கள் அனைவரும், மூப்பர்கள் மட்டுமே இருக்க வேண்டியது முக்கியமானதாக இருந்தது.*

*மூப்பர்கள் முன்னிலையில் பவுல் சென்றபோது, "அவர்களை அவன் வினவி" (வ. 19அ) என்று மட்டுமே லூக்கா கூறினார். லூக்கா அந்தக் காட்சியில் காலந்தாழ்த்தவில்லை, ஆனால் அது உயரிய தனிச் சிறப்பான தருணம் ஆகும். எருசலேமில் இருந்த மூப்பர்களில் பலருக்கு, தங்களின் புறஜாதி சகோதரர்களைத் தழுவிக் கொள்வது அதுவே முதலாவது தடவையாக இருந்திருக்கும். பவுலும் அவரது புறஜாதித் துணையாளர்களும் யூதத் தலைவர்களின் "பாதங்களில்" (4:35ஐக் காணவும்) புறஜாதியாரின் அன்புக் காணிக்கையை வைத்ததும் இந்த நேரத்தில்தான் நடந்திருக்கும். பவுலுக்கு மூப்பர்கள் காண்பித்த பொதுவான பதில்செயலில் இருந்து (21:20), அந்த நன்கொடையானது நன்முறையில் பெற்றுக் கொள்ளப்பட்டதென்று நாம் யூகிக்கின்றோம்.*

## கலக்க மூட்டும் ஒரு அறிக்கை (21:19)

*அடுத்ததாகப் பவுல், "தன் ஊழியத்தினாலே தேவன் புறஜாதிகளிடத்தில் செய்தவைகளை ஒவ்வொன்றாய் விவரித்துச் சொன்னான்" (வ. 19ஆ). பவுல் புறஜாதியாரின் உலகில் தாம் செய்த சாதனைகளை முறைப்படி மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வந்து கூறுவதற்குக் கணிசமான நேரம் எடுத்துக் கொண்டார் என்பது கிரேக்கம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலுமே சுட்டிக்காட்டப்படுகின்றது. நிறைவேற்றப்பட்ட யாவற்றிற்கும் வழக்கம் போலவே,*

தேவனுக்கே புகழ்ச்சி செலுத்தப்பட்டது. தேவனுக்கு மகிமையைச் செலுத்தவும், தமது ஊழியம் தேவனால் அங்கிகரிக்கப்பட்டிருந்தது என்பதையும் வலியுறுத்தவுமே பவுல் இவ்வாறு செய்தார். எருசலேமில் இருந்த மூப்பர்களிடத்தில் பவுல் அறிக்கை செய்தது இது முதல் தடவையல்ல (15:4). இருப்பினும், இந்தத் தடவை, பவுல் தமது ஊழியத்தின் திறம் பற்றிய ஆதாரங்களுடன் வந்திருந்தார்: அவருடன் வந்திருந்த கட்டுறுதிமிக்க புறஜாதி இளம் சகோதரர்களை அவர் சுட்டிக்காட்ட முடிந்தது.

நன்கொடையை முன் வைத்தது, அத்துடன் பவுலின் அறிக்கை ஆகியவை அவரது மூன்றாவது பயணம் வெற்றியுடன் முடிந்ததைக் குறிப்பிட்டன. இந்த நிகழ்ச்சியானது பவுலின் புகழ்பெற்ற ‘‘மூன்று ஊழியப் பயணங்களின்’’ முடிவை அடையாளப்படுத்தின. ரோமப் பேரரசின் கிழக்குப் பாதியில், பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்த பவுல் அப்பகுதியில் இருந்த முக்கிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் சபைகளை நிலைநாட்டியிருந்தார்! அது அவரது ஊழியத்தின் புதிய பகுதியானது தொடங்கு முன் அருஞ்சுவையூட்டும் தருணமாய் இருந்தது.

## கவலைக்குரிய ஒரு மறுசெயல் (21:20-22)

அவரது அறிக்கைக்கு மூப்பர்களின் மறுசெயலானது பவுலின் இருதயத்தை முதலில் மகிழ்ச்சிப் படுத்தி, பிறகு கவலைப் படுத்தியிருக்க வேண்டும். முதலில், “அதை அவர்கள் கேட்டுக் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்’’ (வ. 20அ). அவர்களின் ஆரம்ப கட்டப் பதில்செயலில் பல உண்மைகள் நிலைநிற்கின்றன: (1) பவுல் செய்திருந்தவைகளில் தேவனின் கரத்தை அவர்கள் கண்டார்கள் மற்றும் (2) அவர் பவுலையல்ல, தேவனையே மகிமைப்படுத்தினார்கள். (3) அவர்கள் துதித்தது சற்று நேரம் தொடர்ந்திருந்தது என்பதை இவ்விடத்தில் உள்ள வினைச் சொல் சுட்டிக் காட்டுகின்றது. பவுலும், புறஜாதி சகோதரர்களும் மெய் சிலிர்த்தார்கள் என்று நான் கற்பனை செய்கின்றேன்; அவர்களின் முகத்தில் புன்முறுவலை நான்

*காண முடிகின்றது.*

*பவுலுக்கு மூப்பர்கள் முதலாவது கூறிய வார்த்தைகள்கூட ஊக்கமூட்டுபவைகளாகவே இருந்தன. "சகோதரனே" என்று அவர்கள் தொடங்கினார்கள். அவர்கள் "சகோதரன்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியது நல்லதொரு அறிகுறியாக இருந்தது. "சகோதரனே, யூதர்களுக்குள் அநேகமாயிரம் பேர்[13] விசுவாசிகளாயிருப்பதைப் பார்க்கிறீரே" (வ. 20ஆ). தேவன் புறஜாதியாரிடத்தில் மட்டுமின்றி, யூதர்களிடத்திலும் கிரியை செய்து கொண்டிருந்தார் என்பதைப் பவுல் அறிய வேண்டு மென்று அவர்கள் விரும்பினார்கள். பவுல் தம்முடைய நாட்டவர் மீது தாம் கொண்டிருந்த அக்கறையைப் பற்றிச் சற்று முன்னர் (ரோமர் 9:1-3) தான் எழுதியிருந்தார். ஆயிரக்கணக் கான யூதர்கள், கிறிஸ்தவர்களாகியிருந்தார்கள் என்று கேள்விப் படுகையில், அவரது உள்ளம் சிறகடித்துப் பறந்திருக்கும்.*

*ஆனால் விரைவிலேயே அவர் தரையில் வந்து மோதும் படிக் கொண்டு வரப்பட்டார் - ஏனென்றால், மூப்பர்கள் அந்த நேர்மறையான எண்ணத்துடன் முடித்துக் கொள்ளவில்லை. உங்களில் பலர் பவுலின் நிலையில், உங்களை அடையாளப் படுத்திக் கொள்ள முடியும். மாபெரும் கருத்து என்று நீங்கள் கருதுகின்ற விஷயத்தை ஒருவேளை நீங்கள் முன் வைக்கின் றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உங்களின் நம்பிக்கைக் குரியவர் முதலில் நேர்மறையாகப் பதில்செயல் செய்கையில் நீங்கள் உயரப் பறப்பதாக பலூன் போலாகி விடுகின்றீர்கள். மூப்பர்கள், "ஆனால்" என்ற வார்த்தையைத் தங்கள் பதிலில் பயன்படுத்தவில்லை, ஆனால் அதை அவர்கள் வைத்திருந் திருப்பார்கள்.*

*மூப்பர்கள் தொடர்ந்தனர்: "அவர்களெல்லாரும் [ஆயிரக் கணக்கான யூதக் கிறிஸ்தவர்கள்] நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள்'' (வ. 20இ). இவ்வார்த்தைகள் பவுலின் அமைதியைக் குலைத்திருக்க வேண்டும். நியாயப்பிரமாணத்திற்காக வைராக்கியமாயிருப் பதன் அர்த்தம் என்னவென்று பவுல் அறிந்திருந்தார். அவர் சிறந்த முறையில் கற்றுக் கொள்ளும் முன்பு தாமும் நியாயப் பிரமாணத்திற்காகப் பக்தி வைராக்கியமுள்ளவராக இருந்தார் (கலா. 1:14; பிலி. 3:5-9). "மனமாற்றமடைந்திருந்த" பரிசேயர் கள், நியாயப்பிரமாணத்தின்மீது தாங்கள் கொண்டிருந்த*

*வைராக்கியத்தினால் அதற்கு முன்பு தொல்லைக்குக் காரண மாய் இருந்தார்கள் (அப். 15:5). ஒருவேளை, பவுல் "புறஜாதி யாரின் நடுவில் எனது ஊழியம் குறித்தும், எருசலேமில் நான் இருப்பதற்கான நோக்கம் குறித்தும் இது (யூதக் கிறிஸ்தவர் களின் வைராக்கியம்) எனக்குச் செய்யக் கூடியதென்ன?" என்று வியப்படைந்திருக்கலாம்.*

*பவுலைப் பற்றிப் பரப்பப்பட்ட வதந்திகள் குறித்து மூப்பர்கள் பேசினார்கள். வதந்திகள் என்பவை கபடமான காரியங்கள். ஷேக்ஸ்பியர் அவைகளை ''தீட்டாக்கும் குசுகுசுப்புகள்" என்று அழைத்தார். குதிரை வளர்ப்பவர் ஒருவர் தம்மிடம் இருந்த வேகமாய்ச் செல்லும் சவாரிக் குதிரை யொன்றிற்கு ''வதந்திகள்'' என்று பெயரிட்டார். அவரது குதிரைக்கு அப்படியொரு விநோதமான பெயர் வைத்தது ஏன் என்று கேட்ட பொழுது, அவர் சிரித்துக் கொண்டே, "ஏனெனில் வதந்திகள் வேகமாய்ப் பயணிக்கின்றன" என்று கூறினார். பவுலைப் பற்றி வெகு தூரத்திற்கு வேகமாகப் பரவியிருந்த வதந்தி இதோ: ''புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவும், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லை யென்று நீர் சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயை விட்டுப் பிரிந்து போகும்படி போதிக்கிறீரென்று இவர்கள் [விசுவாசித்திருந்த யூதர்கள்] உம்மைக் குறித்துக் கேள்விப் பட்டிருக்கிறார்கள்" (வ. 21).*

*மற்ற பல வதந்திகளைப் போலவே, இதிலும் உண்மையின் கூறு ஒன்று இருந்தது, ஆனால் இதன் சாரத்தில் இது பொய்யானதாய் இருந்தது. யூதரோ அல்லது புறஜாதியாரோ, யாராயிருந்தாலும் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் எவரொருவரும் நீதிமானாக்கப்பட முடியாது என்பதைப் பவுல் வலியுறுத்தியிருந்தார் (ரோமர் 3:20; கலா. 2:16; 3:11; 5:4) மற்றும் அவர், விருத்தசேதனமானது இரட்சிப்புக்கான ஏதொன்றையும் பெற்றிருந்ததில்லை (ரோமர் 2:25-29; கலா. 5:6) என்பதையும் வலியுறுத்தியிருந்தார்; ஆனால் அவர், யூதர்கள் தங்களது யூதத்துவ முறைமைகளைக் கைவிடும் படியாக ஊக்குவிப்பதற்கு முகாம் எதையும் நடத்தவில்லை.*

*''தொன்று தொட்டு வரும் செயல்கள்'' பற்றி, யூதக் கிறிஸ்தவர்கள் தங்களின் பாரம்பரியங்களை, அவைகளை*

சத்தியத்திற்கு முரண்படாதவைகளாயிருக்கும் (மத். 15:3ஐக் காணவும்) வரையில் மற்றும் அவர்கள் அப்பாரம்பரியங்களைப் புறஜாதியார் மீது சுமத்தாத வரையிலும்[14] அவைகளை அவர்கள் தங்களின் தேசீயப் பிறப்புரிமையின் பாகமாகக் கைக் கொள்வதை அவர் மறுத்துக் கூறவில்லை. விருத்தசேதனத்தைப் பொறுத்தமட்டில், அவர் தாம் போதிக்கும்படி சென்றடையும் நம்பிக்கையை யூதர்கள் மீது அவர் வைத்திருந்ததால் அவர்களின் மனம் புண்படாதபடி, அவர் தீமோத்தேயுவை விருத்தசேதனம் செய்து கொள்ளும்படிக்கு வற்புறுத்தி யிருந்தார் (அப். 16:3[15]). விசுவாசமற்ற யூதர்களைப் பொறுத்த மட்டில், ‘‘யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவு மானேன்’’ (1 கொரி. 9:20) என்பதே அவரால் கூறப்பட்ட கொள்கையாக இருந்தது.

வதந்தியானது உண்மையற்றதாக இருந்தது - மற்றும் மூப்பர்களும் அது உண்மையற்றது என்பதை அறிந்திருந் தார்கள்.[16] இருந்த போதிலும், மூப்பர்கள் அதைக் கண்டபோது தங்களின் இக்கட்டான நிலை பற்றிப் புறக்குறிப்பிட்டார்கள்: “இப்பொழுது செய்ய வேண்டியதென்ன? நீர் வந்திருக்கிறீ ரென்று இவர்கள் கேள்விப்பட்டு, நிச்சயமாகக் கூட்டங் கூடுவார்கள்” (வ. 22).[17] “இவர்கள்” என்பதன் முன் நிகழ்வாக விசுவாசமுள்ள யூதர்கள் எருசலேமில் இருந்தது இங்குள்ளது (வ. 20). வாரத்தின் முதல் நாளில் வரக் கூடிய பெந்தெ கொஸ்தே பண்டிகை நாள் மிகவும் சமீபமாய், ஒருவேளை அடுத்து வரும் ஒரு சில மணிகளில் தொடங்குவதாய் இருந்தது. வாரத்தின் முதல் நாள் வரும்போது, அந்தப் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள் அப்பம் பிடுவதற்காக ஒன்றுகூடுவார்கள் (அப். 20:7[18]). மூப்பர்கள், ‘‘ஆயிரக்கணக்கான இம்மக்கள் இங்கு ஒன்றுகூடியுள்ள பொழுது, அவர்கள் கேள்விப்பட்ட விஷயங் களினால் ஏற்கனவே கலக்கமடைந்திருந்தார்கள், இப்பொழுது அவர்கள் பவுலையும் அவருடைய புறஜாதி நண்பர்களையும் அங்கு கண்டால், எரிச்சலும் வன்முறையும் வெடித்துச் சிதறு வதிலிருந்து நாங்கள் மன உறுதியை எவ்விதம் காப்பாற்றிக் கொள்ள முடியும்?” என்று கேட்டனர்.

‘‘இப்பொழுது செய்ய வேண்டியது என்ன?’’ என்ற கேள்வியை மூப்பர்கள் தேவனிடத்தில் கேட்பதற்கு அதுவே

சிறந்த வேளையாக இருந்தது. அவர்கள் அவ்வாறு செய்தார்கள் என்பதற்கான சுட்டிக்காட்டுதல் எதுவும் இல்லை. அவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பது பற்றிப் பவுல் என்ன நினைத்தார் என்று அவர்கள் கேட்டிருக்கலாம், ஆனால் அதையும் அவர்கள் செய்யவில்லை.[19]

''இப்பொழுது செய்ய வேண்டியது என்ன?'' என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டிருந்தால், தேவனால் நியமிக்கப் பட்ட முன்னோடிகள் போலச் செயல்படத் தொடங்குங்கள் - கட்டளையைப் பின்பற்றுங்கள் என்று கூறும்படி தூண்டப் பட்டிருப்பேன்! இதே போன்றதொரு கருத்தை ஜான் வெஸ்லி அவர்கள், ''யாக்கோபு யூதக்கிறிஸ்தவர்களிடத்தில்: நான் மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்வதில்லை; பேதுருவும் அதைக் கைக்கொள்வதில்லை; உங்களில் எவரும் அதைக் கைக்கொள்ளத் தேவையில்லை என்று கூறியிருக்க வேண்டும்''[20] என்று கூறுகையில் வெளிப்படுத்தினார். மூப்பர் களின் தலைமைத்துவத்தில் இருந்த குறைபாட்டைப் பற்றி லாய்டு ஒஜில்வீ அவர்கள் திகைப்பை, " 'இது போதும்! நாம் நமது சகோதரர் பவுலை நம்புகின்றோம், மற்றும் இந்த வதந்திகள் யாவும் பொய்யானவை என்றும் நாம் அறிகின் றோம். இவருடைய ஊழியத்தைப் பற்றி இனி எந்த விமர்சன மும் செய்யப்படாது. நாம் ஏற்றுக் கொண்டவைகளை இந்த அப்போஸ்தலர் உண்மையாகக் காத்துக்கொண்டார் என்று நாம் நம்புகின்றோம்' என்று ஒருவர் கூடக் கூறியிராதது ஏன்?"[21] என்று எழுதும்போது வெளிப்படுத்தினார்.

## திகைப்பூட்டும் ஒரு பரிந்துரை *(21:23-25)*

மூப்பர்கள் இக்கேள்வியை, கருத்தெதுவும் வேண்டிப் பெற்றுக் கொள்வதற்காகக் கேட்கவில்லை, மாறாக, முன்பே ஏற்பாடு செய்து வைத்திருந்த ஒரு நிகழ்ச்சிக்கான ஆயத்த அமைவு செய்யவே கேட்டார்கள். அவர்கள் இவ்விஷயத்தைப் பற்றி முன்னதாகவே விவாதித்து, ஏற்கனவே தாங்கள் தயாரித்த திட்டத்துடன் யாக்கோபுவின் வீட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் எதுவும் செய்வதாக இல்லாமல், பவுலே அவ்விஷ

யத்தைப் பற்றிக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் "தீர்வாக" இருந்தது. அவர்கள் அவரிடத்தில், "ஆகையால் நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்ய வேண்டும்" (வ. 23அ) என்று கூறினார்கள். அவர்கள் ஆலோசனை கூறவில்லை; அவர்கள் கட்டளையிட்டார்கள்.[22]

அவர்களின் கண்டிப்பான "பரிந்துரை" இதுதான்: "... பிரார்த்தனை பண்ணிக் கொண்டவர்களாகிய நாலுபேர் எங்களிடத்தில் இருக்கிறார்கள். அவர்களை நீர் சேர்த்துக் கொண்டு, அவர்களுடனே கூடச் சுத்திகரிப்புச் செய்து கொண்டு, அவர்கள் தலைச் சவரம் பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவு செய்யும்" (வ. 23ஆ, 24அ). குறிப்பிடப்பட்ட அந்த நான்கு மனிதர்களும் எருசலேம் சபையின் உறுப்பினர்களாய் இருந்தார்கள் என்பது உத்தேச மானதாகும்.[23] அவர்கள் தலைகளைச் சவரம் பண்ணிக் கொள்ள வேண்டியதாயிருந்ததால், இங்கு குறிப்பிடப்பட்ட பிராரத்தனை என்பது, நசரேய விரதமாயிருக்கும் என்று யூகிக்கப்படுகின்றது.[24]

நசரேய விரதம் என்பது பிரித்து வைத்துக் கொள்ளுதல் மற்றும் ஒப்புக் கொடுத்தல் ஆகியவற்றின் விரதமாக இருந்தது. இது முப்பது நாட்கள் முதல் வாழ்நாள் முழுவதும் என்ற கால வரையறைகளுக்குள் எடுத்துக் கொள்ளப்படலாம். இந்த விரதத்தின் கீழ் இருப்பவர்கள் தங்கள் முடிகளை வெட்டிக் கொள்ளக் கூடாது, திராட்சையிலிருந்து பெறப்படும் எந்த ஒரு உணவு வகையையும் உண்ணக் கூடாது, இறந்து போன உடல்களின் அருகில் செல்லுவதைத் தவிர்க்க வேண்டும் (எண். 6:2-8). நமது வேதபாடப்பகுதியின் 26ம் வசனமானது "சுத்திகரிப்பின் நாட்கள்" பற்றியும், வசனம் 27ஆனது "ஏழு நாட்கள்" என்பதையும் குறிப்பிடுவதால், இந்த நான்கு மனிதர்களும் இறந்து போன உடலினருகில் சென்றதால் தங்களைத் தீட்டுப்படுத்திக் கொண்டிருந்ததாகவும், அந்தத் தீட்டைச் சுத்திகரிப்புச் செய்ய ஏழு நாட்கள் தேவைப்பட்ட தாகவும், அதன் பிறகு அவர்கள் தங்கள் தலைகளைச் சவரம் பண்ணிக் கொண்டு தங்கள் விரதத்தை மறுபடியும் ஆரம்பிக்க வேண்டியதாயிருந்ததாகவும் பலர் நினைக்கின்றார்கள் (எண். 6:9-12). சுத்திகரிப்பின் நாட்களில் வேலை செய்யாமலும், பலிகள் செலுத்தச் செலவாகும் பணம் கொடுத்தலாலும் இது

*நிறைவேற்றப்பட வேண்டும். ஆகும் செலவுகள் எல்லாவற்றுக் கும் பவுல் பொறுப்பேற்க வேண்டும் என்று மூப்பர்கள் ஆலோசனை தெரிவித்தார்கள்.*[25]

*பவுலின் சொந்த சுத்திகரிப்பு என்பது அவரை ஆலயத் திற்குள் செல்ல அனுமதிக்கும் எளியதொரு சடங்காச்சாரமான கழுவுதலாகவே இருந்திருக்கும்.*[26] *அந்த நான்கு பேருடன் அவர்கள் சுத்திகரிப்பை நிறைவேற்றிய அதே வேளையில், பவுலும் சுத்திகரிப்பின் செயல்பாட்டில் ஈடுபட்ட விஷய மானது (மூப்பர்களின் சிந்தையில்) நியாயப்பிரமாணத்திற்குப் பவுல் தம்மை ஒப்புக் கொடுத்ததை இன்னும் அதிகமாகச் செயல்முறையில் விளக்கப்படுத்தியதாக இருந்திருக்கும்.*

*இவ்விரதத்தின் விபரங்களில் இன்னும் ஆழமாய்ச் செல்லுவதோ அல்லது அப். 21:23-27ல் மிகச் சரியாக நடந்தது என்ன என்று ஆராய்ந்து கொண்டிருப்பதோ தேவையற்ற தாயிருக்கின்றது. நமது பாடத்தைப் பொறுத்த வரையில், பாவ நிவாரணப் பலி உட்பட பலி செலுத்துதல் என்பது நசரேய விரதத்தின் மிகக் குறிப்பிடத்தக்க அம்சமாய் இருந்தது என்பதே முக்கியமானதாகும்: ஒரு மனிதர் தம்மைச் சுத்திகரித்துக் கொண்ட பிறகு, தமது விரதத்தை மறுபடியும் தொடங்கு வதற்காக, இரண்டு காட்டுப் புறாக்களையாவது அல்லது புறாக் குஞ்சுகளையாவது ஆசாரியரிடத்தில் கொண்டு வர வேண்டும், ஆசாரியர் "அவைகளில் ஒன்றை பாவ நிவாரணப் பலியாகவும், மற்றொன்றைச் சர்வாங்க தகன பலியாகவும்" செலுத்தி "அம்மனிதரின் தீட்டை நிவிர்த்தி செய்வார்" (எண். 6:11). அம்மனிதர் தமது விரதத்தை இறுதியாக நிறைவு செய்யும் பொழுது மற்ற பலிகளுடன் "பாவ நிவாரண பலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக் குட்டியை" கொண்டு வர வேண்டும் (எண். 6:14).*

*அந்த நான்கு பேரின் செலவுகளைச் செலுத்துமாறு பவுலுக்கு "அறிவுரை" கொடுத்த மூப்பர்கள் அதன் பிறகு, "அப்படிச் செய்தால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும், நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்றும் எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" (வ. 24ஆ). யாக்கோபும் மற்ற மூப்பர்களும் "நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடத்தல்" என்பது பற்றிப் பேசும்போது, யாக்கோபு சற்று நாணப்பட்டாரா?*

*எட்டு அல்லது அதற்குச் சற்று அதிகமான ஆண்டுகளுக்கு முன்னதாக, எருசலேமில் ஒரு சிறப்புக் கூட்டம் நடந்தபோது, பேதுரு "நம்முடைய பிதாக்களாலும், நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடி" (15:10ஆ) என்று நியாயப்பிரமாணத் தைக் குறிப்பிட்டபோது அவருடைய கருத்துக்கு யாக்கோபும் மற்ற மூப்பர்களும் உடன்பட்டிருந்தார்களே!*[27] இப்பொழுதோ *அவர்கள், சுமக்கக் கூடாதிருந்த அந்த நுகத்தடியைப் பவுல்* இன்னமும் தமது தோள்களில் *சுமக்கவும், அதில் உறுதியுடைய வராயும்* இருக்கிறார் என்று சக கிறிஸ்தவர்களை நம்பச் *செய்யும்படிப் பவுலைக் "கேட்டுக் கொண்டார்கள்!"*

*மூப்பர்கள் தாங்கள் முன் வைத்த திட்ட வரைவானது* மேற்குறித்த முந்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை *மறுபடியும் பின்னுக்கிழுப்பதாக உணர்ந்திருக்க* வேண்டும் *என்பது உறுதி, ஏனென்றால் அந்த முடிவின் பக்கம் தாங்கள் சார்ந்துள்ளார்கள் என்று உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் பின்வருவதை அவசரமாய்க் கூறினார்கள்: "விசுவாசிகளான புறஜாதியார்* இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளாமல், விக்கிரகங்களுக்குப் படைத்ததற்கும், இரத்தத்திற்கும், நெருக் குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும் விலகியிருக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானம் பண்ணி, அவர்களுக்கு *எழுதியனுப்பினோமே என்றார்கள்" (21:25) (15:20, 28ஐயும் காணவும்).*[28] வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், "எங்களது வேண்டுகோள் புறஜாதிக் கிறிஸ்தவர்களை ஈடுபடுத்து வதில்லை. பவுலே நீர் யூதக் கிறிஸ்தவர்களின் பிரயோஜனத் திற்காகவே இதைச் செய்யும்படி உம்மைக் கேட்டுக் கொள்கிறோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

*எருசலேமின் மூப்பர்களைக் குறித்து, நான் பரிதாபப்பட முடியும்.* யூதமார்க்கத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியில் *வாழ்ந்திருந்த அவர்கள் சாத்தியமேயாகாத ஒரு பணி முயற்சியை எதிர் கொண்டார்கள். பொதுவாக* யூதர்கள் தங்கள் *மார்க்கம் மற்றும்* இனம் ஆகியவற்றிற்கிடையில் எந்த வேறு *பாட்டையும் ஒருபொழுதும் ஏற்படுத்தியதில்லை.*[29] வேதாகமம் எழுதப்பட்ட காலங்களிலும், இன்றைய நாட்களி லும் இதுவே உண்மையாகும். *சராசரி* யூதரைப் பொறுத்த *மட்டில், பிரமாணத்தை* விட்டுவிடும்படிக் கேட்டுக் கொள்வ தென்பது அவர் ஒரு யூதராயிருப்பதை விட்டுவிடும்படிக்

*கேட்டுக் கொள்வதாகவே இருந்தது/இருக்கின்றது. மூப்பர்கள், "நியாயப்பிரமாணத்திற்கு எதிராக நாம் பேசினால், சபையில் நமக்கு இடர்ப்பாடு ஏற்படும், மற்றும் நாம் நமது நண்பர்கள் மற்றும் அண்டை அயலாரிடத்தில் ஒருபொழுதும் செல்வாக்கு டையவர்களாய் இருக்க முடியாது" என்று நினைத்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.*

*இதற்கு மறுபுறத்தில், எருசலேமின் மூப்பர்கள் தங்கள் சமுதாயத்திற்கும் சபையில் நியாயப்பிரமாணத்தைக் கட்டிக் காக்கும் பிரிவினருக்கும் அதிகமாக இடமளித்திருந்தார்கள் என்று நினைக்காமலிருக்க என்னால் முடியவில்லை (15:5; கலா. 2:11, 12). எங்குமிருந்த யூதர்களின் ஜெப ஆலயங்களில் பவுல் செய்தது போன்ற தீவிரமான பிரசங்கித்தலை - அவர் அடிக்கப் படவும் அந்த ஜெப ஆலயங்களிலிருந்து வெளியேற்றப்படவும் ஏதுவாயிருந்தது போன்ற பிரசங்கித்தலை (2 கொரி. 11:24ஐக் கவனிக்கவும்) அந்த மூப்பர்கள் ஊக்குவித்தார்களா என்பதில் நான் சந்தேகம் அடைகின்றேன். சத்தியத்தைப் பற்றிய உடன்பாடற்ற நிலையில் (நீதி. 23:23) "எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பது" (ரோமர் 12:18ஆ) என்ற அறை கூவலானது ஒருபொழுதும் சுலபமாயிருப்பதில்லை. அது எருசலேமில் சுலபமானதாயிருந்ததில்லை; அது நீங்கள் வாழும் இடத்திலும் சுலபமாய் இருப்பதில்லை.*

## *அதிர்ச்சியளிக்கும் ஒரு விளைவு (21:26, 27)*

*பவுல் செய்ய வேண்டியதென்ன என்று மூப்பர்கள் கூறியபோது பவுல் எவ்விதம் பதில்செயல் செய்தார்? "எனக்குக் கட்டளையிடுவதற்கு நீங்கள் யார்?" என்று அவர் எதிர்த்தாரா? "நீங்கள் இந்த சபையின் முன்னோடிகளாயிருக்கின்றீர்கள். இந்த விஷயத்தைக் கவனிப்பது உங்கள் பொறுப்பு ஆகும், அது என்னுடைய பொறுப்பு அல்ல" என்று அவர் அறிவித்தாரா? "சில சூழ்நிலைகளில் நான் 'நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவன்' ஆகும் கொள்கை கொண்டிருந்தது உண்மையே, ஆனால் அந்தக் கொள்கையானது விசுவாசியாத யூதர்களை ஆதாயப்படுத்தும் நோக்கத்திற்கானதே தவிர*[30] *யூதக் கிறிஸ்*

*தவர்களை சீராட்டுவதற்கானதல்ல” என்று அவர் மறுத்தாரா? அங்கு கூறப்பட்ட திட்டவரைவின் செயல்பாடானது நியாயப் பிரமாணத்தினால் கட்டுப்படுத்துபவர்களால் (அப். 15:5), பவுல் அவர்களுடன் ஒத்துப் போனார் என்று கூறுவதற்கு ‘‘ஆதாரமாய்’’ பயன்படுத்தப்படலாம் என்பதை பவுல் குறிப்பிட்டாரா?*

*மூப்பர்கள் பவுலை ஒரு மூலைக்குத் தள்ளினார்கள். அந்த அப்போஸ்தலர், சகோதரர்களுக்குள் சமாதானத்தை வளரச் செய்வதற்காக எருசலேமுக்கு வந்தார், ஆனால் மூப்பர்களோ, அவரது வருகையானது இசைவின்மையை வளர்த்ததாக அவரிடம் கூறினார்கள். அவர் வெற்றியற்ற ஒரு சூழ்நிலையில் இருந்தார். அவர் மூப்பர்களின் திட்டத்திற்கு இணங்கிச் செல்ல மறுத்தால், அவர் மீது சபையில் முரண்பாட்டை ஊக்கப் படுத்தியதாகக் குற்றம் சாட்டப்படலாம்; அவர் அவர்களு டைய திட்டத்திற்கு இணங்கிச் சென்றால், அவர் நிலையற்ற மனம் கொண்டார் என்ற குற்றம் சுமத்தப்படலாம்.*

*மூப்பர்களின் திட்டத்திற்குப் பவுலின் சிந்தனை அல்லது வார்த்தையினாலான பதில்செயலை லூக்கா பதிவு செய்ய வில்லை. அவரது நோக்கமெல்லாம், பவுல் கைது செய்யப்பட்ட தற்குக் காரணமான நிகழ்ச்சிகளை ஒரு சில வார்த்தைகளில் சுருக்கித் தருவதே ஆகும். திகைப்புக்குரிய, பெரும்பாலும் விவரித்துக் கூற வேண்டிய அந்த நிகழ்ச்சியை அவர் எளிமை யாக அறிக்கை செய்தார்: ‘‘அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக் கொண்டு, மறுநாளிலே அவர்களுடனே கூடத் தானும் சுத்திகரிப்புச் செய்து கொண்டு, தேவாலயத்தில்*[31] *பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காகவும் வேண்டிய பலி செலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்” (21:26).*

*அந்த நான்கு மனிதர்களும் அவர்களின் ஏழு நாட்கள் சுத்திகரிப்பு நிறைவேறுமளவும் தேவாலயத்தினுள் செல்லு வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள், ஆனால் பவுலின் சடங்காச்சாரக் கழுவுதல் என்பது ஓரிரண்டு நாட்களிலேயே நிறைவேறியிருக்கும்.*[32] *அவர்களின் சார்பில் பவுல் தேவாலயத் தினுள் சென்று, அவர்களின் சுத்திகரிப்பின் நாட்கள் முடியும் போது செலுத்த வேண்டிய பலிகளுக்கான ஏற்பாடுகளை அவரால் மேற்கொள்ள முடிந்திருக்கும்.*

இன்னும் இரண்டு உண்மைகளைக் குறிப்பிட வேண்டியுள்ளது: (1) பவுல் தாம் தொடங்கியதை இன்னும் நிறைவாக்காதிருந்தார். அடுத்த வசனமானது, "அந்த ஏழு நாட்களும் நிறைவேறி வருகையில் ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனைத் தேவாலயத்திலே கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு, அவன்மேல் கைபோட்டு'' (வ. 27; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன) என்று குறிப்பிடுகின்றது. பலிகள் செலுத்தப்படுவதற்கு முன்னதாகவே (பலி செலுத்துதலானது அந்த ஏழு நாட்களின் முடிவில்தான் மேற்கொள்ளப்படும்) கிறிஸ்தவராயிராத யூதர்கள் பவுலைப் பிடித்தார்கள். இரத்தப் பலி செலுத்தப்படுவதில் பவுல் உண்மையில் பங்கேற்காமல் காத்துக் கொள்ளப்படுவதில் தேவனுடைய கரம் தக்க நேரத்தில் செயல்பட்டதா? இது ஒரு ஆர்வம் நிறைந்த சிந்தனையாகும். (2) பவுலின் செயலானது கலகத்தைத் தடுக்கும் என்று மூப்பர்கள் நம்பியிருந்ததற்குப் பதிலாக, அது கலகத்தை விரைவு படுத்தியது. அவர் ஆலயத்திற்குச் சென்ற நிகழ்ச்சியானது யூத விசுவாசிகளை சாந்தப் படுத்தியதா இல்லையா என்பதை நாம் அறியவில்லை, ஆனால் அது யூதர்களில் இருந்த அவிசுவாசிகளைக் கோப மூட்டியது - அதன் விளைவாகப் பவுல் சிறைப்பிடிக்கப் பட்டார்.

## முடிவுரை

நமது அடுத்த பாடத்தில், மூப்பர்கள் கேட்டுக் கொண்டதைச் செய்யப் பவுல் சம்மதித்தது ஏன் - அவர் அதில் சரியாயிருந்தாரா அல்லது தவறாயிருந்தாரா - என்ற கேள்விகளுடன் நாம் போராடுவோம். பவுல் இவ்விஷயத்தில் சரியானவராய் இருந்தாரோ அல்லது தவறானவராய் இருந்தாரோ, எப்படியிருந்தாலும் இந்த வசனப் பகுதியில் இருந்து நாம் பல பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும்:

சபையில் உறவுமுறைகள் பற்றிய பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும்: ஒரு உறுப்பினர் செய்வது எல்லா உறுப்பினர் களையும் பாதிக்கின்றது என்பது ஒரு பாடம் ஆகும். நீங்கள் எதைச் செய்தாலும், ஒவ்வொருவரையும் உங்களால் சந்தோஷப்படுத்த முடியாது என்பது இன்னொரு பாடமாகும்.

மோசமானவற்றை நம்பத் தயாராகி தங்கள் நம்பிக்கையை மற்றவர்களிடம் பரப்புகின்ற சிலர் எப்பொழுதுமே இருக்கின்றார்கள் என்பது இன்னொரு பாடம் ஆகும். பவுலின் எடுத்துக் காட்டானது இந்த எதிர்மறைச் சிந்தனைகளைச் சீர் செய்வதாய் இருக்கின்றது, மற்றவர்கள் என்ன நினைத்தார்கள் என்பதைப் பற்றி அக்கறைக் காட்டி, சபையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக எதை வேண்டுமானாலும் அவர் செய்யத் தயாராய் இருந்தார். சபை முழுமையற்ற குணங்களுடன் இருக்கும்போதும் கூட, அதை அன்பு செய்வதற்கு நாம் பவுலிடம் இருந்து கற்றுக் கொள்ள முடியும்.

புத்திமதி கூறுதல் பற்றிய பாடங்களையும் நாம் கற்றுக் கொள்ள முடியும் - அதைக் கொடுப்பதிலும் பெறுவதிலும் உள்ள பாடங்கள் பின்வருமாறு: ஒருபுறம், நாம் புத்திமதி கூறுவதில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்; நமது வாழ்வல்ல, மற்றவர்களின் வாழ்வானது பாதிக்கப்பட்டிருக்கையில் அவர்களுக்குப் புத்திமதி கூறுவது மிகவும் சுலபமானதாக இருக்கின்றது. பவுலை வலியுறுத்தியது பற்றி அந்த மூப்பர்கள் எப்பொழுதாவது வருத்தப்பட்டிருப்பார்களா என்று நான் வியக்கின்றேன். அடுத்த வந்த ஐந்து ஆண்டுகளில், அவர்களில் எவராவது, “நமக்காக இல்லாதிருந்தால், பவுல் சிறையில் அடைக்கப்பட்டிருக்கமாட்டார். அவர் வெளியில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருப்பார்” என்று எப்பொழுதாவது கூறியிருப்பார்களா? மறுபுறம், நாம் புத்திமதியை ஏற்றுக் கொள்வதில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். எல்லாப் புத்திமதிகளும் இருமுறை எடை போட்டுப் பார்க்கப்பட வேண்டும்: தேவனுடைய சத்தியம் என்ற ஏவப்பட்ட தராசுகளிலும், சாத்தியமான விளைவுகள் என்ற நடைமுறைத் தராசுகளிலும் அவைகள் எடை போட்டுப் பார்க்கப்பட வேண்டும்.

ஒரு வேளை இவ்வசனப் பகுதியில் நமக்குப் போதிக்கப்படக் கூடிய மிக முக்கியமான பாடமாக இருப்பது தேவனுடைய ஞானம் மற்றும் தேவனுடைய கிருபை வரம் ஆகியவையாய் இருக்கலாம்: பவுல் ஒரு தவறு செய்தாரோ இல்லையோ, தேவன் தமது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றிற்காக அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டார். தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியானது எருசலேமில் பவுலுக்குக்

*காத்திருந்த சிறைப்பிடித்தலின் தீர்க்கதரிசனத்தை (20:22, 23) நிறைவேற்றியது, மற்றும் பவுல் பின்னாளில் ரோமாபுரியை அடைவதற்குக் காரணமாயிருந்த தொடர் நிகழ்ச்சிகளை அது தொடங்கி வைத்தது. நமது நோக்கங்கள் சுத்தமானவை களாகவும், நமது இருதயங்கள் தேவனுக்குள் நிலைத்திருப்ப தாகவும் இருக்கும் வரையில், நாம் முடிவெடுப்பதில் தவறுகள் செய்தாலும் தேவன் நமது வாழ்க்கையில் கிரியை செய்யக் கூடும் என்று அறிவது ஆறுதலானதாக இருக்கின்றது. நான் எத்தனை முறை தவறுகள் செய்திருக்கின்றேன் என்பதைக் கவனிக்கையில், கிருபையுள்ள தேவன் ஒருவருக்கு நான் ஊழியம் செய்வதினால் நன்றி நிறைந்தவனாய் இருக்கின்றேன்!*

---

குறிப்புகள்

*[1]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3" இதழில் அப். 15 பற்றிய நமது கலந்துரையாடலில் குறிப்பிட்டபடி, கலாத்தியருக்கு நிருபம் எப்பொழுது எழுதப்பட்டது என்பது நமக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் அது பவுலின் மூன்றாம் ஊழியப் பயணத்தின் முடிவுக்குச் சற்று முன்னதாக எழுதப்பட்டிருக்க வேண்டும். [2]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் "ஏழைகளை நினைத்துக் கொள்ளுங்கள்" என்ற பாடத்தில் குறிப்பிட்டபடி, பவுலின் மூன்றாம் ஊழியப் பயணத்தின் முடிவின்போது கொரிந்து நகரில் இருந்து ரோமருக்கு நிருபம் எழுதப்பட்டது. [3]எண்ணாகமம் 6:11, 14, நாம் காணப்போகின்றபடி, இந்த நான்கு மனிதர்களும் நசரேய விரதம் கொண்டு இருந்திருக்கலாம். சுத்திகரிப்புக்குப் பிறகு ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு பாவ நிவாரணப் பலியும், விரதம் முடித்த பிறகு ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு பாவ நிவாரணப் பலியும் செலுத்துவது அவசிய மாயிருந்தது. நான்கு பெருக்கல் இரண்டு எட்டு ஆகும். [4]*John Calvin *அவர்கள் கத்தோலிக்க சபையுடன் வாழ்நாள் முழுவதும் பற்றியெரியும் முரண்பாடு கொண்டவராய் இருந்தார். [5]இக்கூற்றானது* A. *ஹாவுஸ்ராத் அவர்களால் கூறப்பட்டது. இது ரிச்சர்ட் லாங்னெக்கர் அவர்களால் Paul, Apostle of Liberty* (New York: Harper & Row, 1964), *246ல் மேற்கோள் காட்டப்பட்டது. [6]நமது பணியின் அறைகூவல் பற்றி, 1989ல் ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் நடந்த நடபடிகள் பற்றிய பிரசங்க முகாமின் மூலம் விளக்கப்படுத்தலாம். அந்தப் பிரசங்க முகாம் பற்றிய புத்தகத்தில் (Acts, The Spreading Flame* [Searcy, Ark.: Harding University, 1989]), *ஒரு பேச்சாளர், பவுல் செய்தது சரியே என்றும் இன்னொரு பேச்சாளர், பவுல் செய்தது*

*தவறு என்றும் கூறினார்கள். இவ்விரு விரிவுரையாளர்களுமே சகோதரர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற மனிதர்கள் ஆவார்கள். [7]பெந்தெகொஸ்தே நாள் வாரத்தின் முதல் நாளாய் இருந்ததால் ("அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில் அப். 2:1க்கான குறிப்புகளைக் காணவும்), அந்தப் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள், அப்பம் பிட்குதலுக்காகக் கூடியிருந்திருப்பார்கள் ("அப்போஸ் தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் அப். 20:7க்கான குறிப்புகளைக் காணவும்). இருப்பினும் நமது வேதபாடப் பகுதியின் வசனம் 22ல் அப்பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள் அச்சமயம் வரையிலும் ஒன்றுகூடி வந்திருக்கவில்லை என்பது மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது (இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் வசனம் 22க்கான குறிப்புகளைக் காணவும்). ஆகவே, பவுல் பெந்தெகொஸ்தே நாளுக்குச் சற்று முந்தி அங்கு வந்தார் என்று நாம் முடிவு செய்கின்றோம். [8]வசனம் 17ல் இப்படிப் பேசப்படுவதாகவே எனக்குக் காணப்படுகின்றது, ஆனால் இவ்வசனமானது யாக்கோபின் வீட்டில் முன்பே நடந்து முடிந்த ஒரு கூட்டத்தைப் பற்றிக் கூறியிருக்கவும், வசனம் 18ல் மூப்பர்கள் யாவரும் கூடியிருக்கையில் நடந்த கூட்டத்தைப் பற்றிக் கூறியிருக்கவும் வாய்ப்புண்டு. [9]"ஏழைகளை நினைத்துக் கொள்ளும்படி" (கலா. 2:9, 10) பல ஆண்டுகளுக்கு முன்பு பவுலிடம் கேட்டுக் கொண்டவர்களில் யாக்கோபு மட்டுமே எருசலேமில் எஞ்சியிருந்திருந்தார், அந்த வேண்டுகோளின் தூண்டுதலின்படிதான் பவுல் புறஜாதியாரின் சபைகளில் நன்கொடை சேகரித்திருந்தார். பவுல் யாக்கோபினிடத்தில் அந்த நன்கொடையை எடுத்துச் சென்றது இயல்பானதேயாகும். [10]பவுலின் ரோமாபுரிக் கடற்பயணம் பற்றிய விபரம் தொடங்கு முன், லூக்கா தமது எடுத்துரைப்பில் இவ்விடத்தில்தான் கடைசியாக தன்மைப் பெயரைப் பயன்படுத்தினார் (27:1). லூக்கா ஒருவேளை கண்ணோட்டத்தின் கவனம் முழுவதையும் பவுலின்மேல் திருப்பியிருக்கலாம். ஆயினும், லூக்கா பவுலுடன் ரோமாபுரிக்குப் பயணம் சென்றிருந்ததால், பவுல் செசரியாவில் சிறைப்பட்டிருந்த இரண்டு ஆண்டு காலத்தில் லூக்கா அநேகமாய் பலஸ்தீனத்தில் தங்கியிருந்திருக்கலாம். இந்தக் காலகட்டத்தில் அவர், இயேசுவின் வாழ்வு மற்றும் சபையின் தொடக்க நாட்கள் (லூக். 1:3) பற்றிய தமது இருமடங்குப் பணிகளுக்கு (புத்தகங்களுக்கு) தேவையான ஆராய்ச்சியை மேற்கொண்டிருந் திருக்கலாம்.*

*[11]உலகம் முழுவதிலும் அப்போஸ்தலர்கள் பயணம் செய்தது பற்றிக் கூறும் ஆதிப் பாரம்பரியங்கள் பல உள்ளன. அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டும், சபைகளை நிலைநாட்டிக் கொண்டும் இருந்தார்கள். [12]மூப்பர்கள் எல்லாரும் இருக்க வேண்டும் என்பது பவுலின் கருத்தா அல்லது யாக்கோபின் கருத்தா? எல்லா மூப்பர்களும் இருக்க வேண்டுமென்று இவ்விருவருமே விரும்பினார்கள் என்றே நான் யூகிக்கின்றேன்: நன்கொடையானது கையளிக்கப் படுகையில் எல்லாரும் இருக்க வேண்டுமென்று பவுல் விரும்பியிருப்பார். பிரார்த்தனை செய்து கொண்ட நாலுபேரின் செலவுகளைப் பவுல் செய்ய வேண்டும் என்ற "ஆலோசனைக்கு" அதிக மதிப்புப் பெறுவதற்காக எல்லாரும் இருக்க வேண்டும் என்று யாக்கோபு விரும்பியிருப்பார். [13]கிரேக்க மொழியில் "பத்தாயிரக் கணக்கானவர்கள்" என்ற நேரடி அர்த்தம் தரும் வார்த்தை இவ்விடத்தில் உள்ளது. [14]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3" இதழில் 16:1-5க்கான குறிப்புகளைக் காணவும். [15]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3" இதழில் 16:3க்கான குறிப்புகளைக் காணவும். [16]அந்த வதந்தி பொய்யானது என்ற உண்மையினால், அது அபாயமற்றது என்று அர்த்தப்படுவதில்லை - இதைப் பவுலும் நன்றாக அறிந்திருந்தார். இயேசுவைப் பற்றிய ஸ்தேவானின் உபதேசமானது முறைமைகளை மாற்றும் என்ற வார்த்தை பரவியபோது (அப். 6:14), ஸ்தேவான் மரணத்திற்கு*

ஆளாக்கப்பட்டார், அவரைக் கொலை செய்வதில் பவுலும் உதவியிருந்தார். [17]மேற்கத்திய வசனத்தில், "பிறகு என்ன? நீர் இங்கு வந்துள்ளது பற்றி அவர்கள் கேள்விப்படுவார்களாகையால், *நிச்சயமாகவே கூட்டங் கூடுவார்கள்"* என்றுள்ளது. மேற்கத்திய வசனத்தைப் பிரதிபலிக்கும் வகையில் KJVயிலும் இவ்விடத்தில், "the multitude must needs come together" என்றுள்ளது. சிலர் இதை விசுவாசமற்றவர்களின் கும்பலைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளுகின்றனர், ஆனால் மூப்பர்கள் கிறிஸ்தவ யூதர்களைப் பற்றியே அக்கறையாய் இருந்தார்கள் என்பதைச் சந்தர்ப்பப் பொருளானது சுட்டிக்காட்டுகின்றது. [18]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் அப். 20:7க்கான குறிப்புகளைக் காணவும். [19]அவ்விஷயத்தைப் பற்றி முடிவு செய்யு முன்னர், குறைந்தபட்சம் அவர்கள் அதைப் பற்றிப் பவுலிடமும், அங்கிருந்த மற்றவர்களிடமும் கலந்துரையாடியிருக்க முடியும். [20]Quoted in James Burton Coffman, *Commentary on Acts* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1976), 408.

[21]Lloyd J. Ogilvie, *The Communicator's Commentary,* vol. 5, *Acts* (Dallas: Word Publishing, 1983), 304. [22]கிரேக்கத்தில் இவ்வினைச் சொல்லானது கட்டளை வடிவில் உள்ளது. [23]மூப்பர்கள், அந்த நான்கு பேரையும் கூட்டத்திற்கு அழைத்து வந்திருக்கவும் சாத்தியமுண்டு (வ. 26). [24]இந்த நிகழ்ச்சியை, 18:18ல் குறிப்பிடப்பட்டுள்ள பவுலின் பிரார்த்தனையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். எண்ணாகமம் 6:18ன்படி, இவ்விரதத்தின் தொடக்கத்தில் அல்ல, ஆனால் இதன் முடிவிலேயே தலைச் சவரம் பண்ணப்பட்டது; இது வேறெங்குமல்ல, ஆனால் பலி செலுத்தப்படும் இடத்திலேயே செய்யப்பட்டது. இந்த நான்கு பேரின் பிரார்த்தனை நசரேய விரதமே என்பது உறுதியாயிருக்க, பவுலின் பிரார்த்தனை என்ன என்பது இன்னமும் புதிராகவே உள்ளது. [25]பொதுவாகவே பவுல் பணமற்றவராய் இருந்ததால், "அவர்களின் செலவுக்குச் செலுத்த" பவுல் எங்கிருந்து பணம் பெற்றார் என்பதை பற்றி எழுத்தாளர்கள் அதிகமாகவே கவலைப்படுகின்றார்கள். பரிசுத்தவான்களுக்கென்று சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து எடுத்து இதற்குப் பயன்படுத்திக் கொள்ளும்படி மூப்பர்கள் பவுலுக்குக் கூறியதாகச் சிலர் கருத்துத் தெரிவித்தார்கள், ஆனால் அது நிதியைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் மற்றும் இதற்குப் பவுல் ஒத்துக் கொண்டிருப்பார் என்று என்னால் கற்பனை செய்ய முடியவில்லை (2 கொரி. 8:20, 21). பிற்காலத்தில் பவுல் ரோமாபுரியில் இரண்டு ஆண்டுகள் தங்கியிருக்க ஒரு வீட்டுக்கு வாடகை தரப் பணம் அவரிடத்தில் இருந்ததால் (அப். 28:30), அச்சமயத்தில் பவுலுக்குச் சொத்துரிமை ஏதாவது கிடைத்திருக்கலாம் என்று சிலர் யூகிக்கின்றனர். இது ஒன்றும் பெரிதாகக் குறிப்பிடத் தக்க விஷயமல்ல. அநேகமாக, பவுல் தாம் வழக்கமாகப் பணம் பெற்ற வழியிலேயே வேலை செய்தல் அல்லது தாராளகுணமுள்ள சகோதரர்கள் மூலமாகவே - பெற்றிருப்பார். [26]சடங்காச்சாரக் கழுவுதலின் முன்மாதிரியொன்றை லேவியராகமம் 15:1-30ல் காணவும். அந்த மனிதர்களுடன் பவுலும் சேர்ந்து நசரேய விரதம் மேற்கொண்டார் என்று சுட்டிக்காட்டப்படுவதில்லை மற்றும் பல வருடங்களுக்குமுன் தாம் செய்து கொண்ட பிரார்த்தனையை (18:18) அப்போதுதான் நிறைவு செய்து கொண்டார் என்பதற்கான சுட்டிக்காட்டுதல் நிச்சயமாகவே இல்லை. பெரும்பாலும், யூதர்கள் புறஜாதியாரின் நாடுகளில் இருந்து திரும்பும்போது, அவர்கள் சடங்காச்சாரக் கழுவுதல்களின் செயல்பாட்டை செய்வதுண்டு. ஒருவேளை இது போன்ற ஒரு செயல்பாட்டைப் பவுல் தமது சுத்திகரிப்புச் சடங்கில் செய்திருக்கலாம். ஒருவேளை, அவர் ஆலயத்திற்குள் செல்லுமுன் மற்றும் ஆசாரியர்களிடம் மற்ற ஏற்பாடுகளைச் செய்யுமுன் இப்படிப்பட்ட செயல்முறை தேவைப்பட்டிருக்கும். [27]பேதுரு இதைக் கூறிய போது (15:13) யாக்கோபும் அங்கிருந்தார்; மற்றும் நமது வேதபாடப்

*பகுதியின் வசனம் 25ல் அம்மூப்பர்கள் அப். 15 கூட்டத்தில் கடிதம் எழுதப்பட்ட போது தாங்கள் அங்கிருந்ததாக அடையாளப்படுத்திக் கொண்டார்கள். [28]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3" இதழில் அப். 15:20க்கான குறிப்புகளைக் காணவும். [29]அடுத்த பாடத்தில் "யூதத்துவத்தின் தனித்தன்மைகள்" என்பதன் கீழுள்ள குறிப்புகளைக் காணவும். [30]1 கொரிந்தியர் 9:20ஐக் காணவும்.*

*[31]இவ்விடத்தில் "தேவாலயம்" என்ற வார்த்தை புறஜாதியாரின் மண்டபம் உள்ளிட்ட தேவாலயவளாகத்தை மட்டுமல்லாது, தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தைக் குறிக்கின்றது. தேவாலயத்தின் வரைபடத்தைக் காணவும். [32]சடங்காச்சாரமான கழுவுதல்கள் கொண்ட சடங்கு ஒன்றின் மாதிரிக்கு, மறுபடியும் லேவியராகமம் 15:1-30ஐக் காணவும்.*